IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 26 /2021
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மதியழகன் | Caste | : - |
| Father Name | : பாண்டுரங்கன் | Calling | : - |
| Village | : சேனூர் கிராமம் | Religion | : - |
| Town | : காட்பாடி தாலுக்கா | Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 20 day of January, 2023.

Chief Examination

1. நான் இந்த வழக்கின் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். தமிழில் மொழிபெயர்த்து படிக்ககேட்டேன் சரியாக இருந்தது கையொப்பம் செய்தேன். 31.8.1981 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திர எண்.3366/1981-ன் சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ1 ஆகும். 10.3.2003 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திர எண்.1072/2003-ன் அசல் வா.சா.ஆ2 ஆகும். காட்பாடி வட்டாட்சியரால் என்பெயருக்கு வழங்கப்பட்ட நிலஉரிமை பதிவேட்டின் அசல் வா.சா.ஆ3 ஆகும்.

2. தமிழ்நாடு வருவாய்த்துறை நிலஉரிமை விவரங்கள் பதிவேட்டு வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட காட்பாடி துணை வட்டாட்சியர் கையொப்பமிட்டு சேனூர் கிராம சர்வே எண். 177, 178-க்கு உட்பட்ட என்பெயரில் வழங்கப்பட்ட கணினி பட்டா எண்.247-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ4 ஆகும். சேனூர் கிராமம், கிராம நிர்வாக அலுவலர் வழக்கு சொத்தின் சர்வே எண்கள் குறித்த விவரத்தை காட்டும் அடங்கல் பதிவேட்டிலிருந்து சான்றிட்டு வழங்கிய உண்மை நகல் வா.சா.ஆ5 ஆகும். 12.9.2018 தேதியிட்ட வேலூர் மாவட்ட நில

அபகரிப்பு தடுப்பு பிரிவு உதவி காவல் ஆய்வாளர் மனுவிசாரணை முடித்து அளித்த அறிக்கையின் அசல் வா.சா.ஆ6 ஆகும். தாவாபடி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை- பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.